ஜனவரி வரை என்று கல்வி ஆண்டுகள் உள்ளன. அதை மாற்றி ஜூன் முதல் ஜூலை வரை என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதா ? அப்படி இருந்தால் எப்போது முதல் அமலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மாணவர்கள் ஒரு ஆண்டுக்குத் தேவையான படிப்பு நாட்களில் இடைக்காலத்தில் லீவு எடுக்காமல், ஒழுங்காக 220 நாட்களும் ஆஜராகி விடுவதால் லீவுகள் அதிகமாகி வருகிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் நடுநிலைப் பள்ளிகளில் அரையாண்டுத் தேர்வு முடிந்தபிறகும், கிறிஸ்து பிறப்புக்கும் புதுவருட லீவும் சேர்த்து 10 நாட்களுக்குத்தான் லீவு விடுகிறார்கள். அதைக் கூட்டி 20 நாட்களுக்கு லீவு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த உரிமையை நாம் பள்ளிகளுக்குத் தந்திருப்பதன் மூலமாக அங்கேயே அவர்கள் நிறைவு செய்து கொள்ளலாம். 220 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இட ஒதுக்கீடு.

*513 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில், பணிபுரியும் ஆசிரியர் களுக்கு பி. டி. பயிற்சியில் இடஒதுக்கீட்டின் சதவீதத்தினை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

*514 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில், பணிபுரியும் ஆசிரியர் களுக்கென குறுகியகால B.T., பயிற்சி அளிக்கும் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

1978 மார்ச் 11]

(முற்பகல் 9-20)

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுவாக பள்ளிக்கூடங்களில் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்கு பி. டி. பயிற்சியில் இட ஒதுக்கீட்டின் சதவிகிதத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் பரிசீலிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பள்ளிகளின் தேவைகளைப் பொறுத்து அது பரிசீலிக்கப்படும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, பணியில் இருக்கும் ஆசிரியர்கள் பி. டி. பயிற்சி பெறுவதற்காக ஷார்ட் டர்ம் கோர்ஸ் குறுகியகால பயிற்சி முறை அவர்களுக்கு அனுமதிக்கப் பட்டு இருந்தது. இப்போது அது நீக்கப்பட்டு இருக்கிறது. அதனால் ஆசிரியர்கள் மிகவும் தொல்லைக்குள்ளாக்கப்பட்டிருக் கிறார்கள். ஆகவே, அந்தக் குறுகியகால பயிற்சிக்கு தேர்ந் தெடுக்கப்படுகிறவர்களில் இட ஒதுக்கீடு குறைத்தாகிலும், அந்த 6 மாத படிப்பை அவர்கள் பெறுகிற வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு குறுகியகால பயிற்சி வசதி அளிப்பதன் மூலம், அவர்கள் அதை முடித்துவிட்டு வந்தபிறகு, பி. டி. ஆசிரியர் பதவி தரவேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்படக்கூடும். அவர்களில் பெரும்பாலோர், வரலாறு போன்ற பாடங்களை எடுத்து தேறியிருப்பதால், அது போன்ற பாடங்களில் படித்து பட்டம் பெற்ற பி. டி. ஆசிரியர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதால், இது குறித்து பரிசீலிக்க வேண்டிய தேவையில்லை.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஹையர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் படிப்படியாக B.A., B.T படித்து தேர்வு பெற்ற பின் முன்பிருந்த அந்நிலையிலேயே பணிபுரிந்து கொண்டு இருந்தால், பி. டி. ஆசிரியர்கள் பதவி காலியாகும்போது, அப்படிப்பட்டவர்களுக்கு முதலிடம் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரே நிர்வாகத்தில் இப்போது இருக்கின்ற ஆசிரியர்கள் பி.டி. படித்தவர்களாக இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு முதல் இடம் தரப்படும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, பணியில் இருக்கும் ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதால் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய பிரச்னை வருவது இல்லை. குறுகியகால பயிற்சி அவர்களுக்கு இல்லாத காரணத்தால், முன்பு அவர்கள் 6 மாத காலம் லீவ் எடுத்துக்கொண்டு சென்று படித்து வந்தார்கள் என்றால் இப்போது அதிகமான அளவிற்கு லீவ் எடுத்துக்கொண்டு, அதைப் படிக்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்குக் குறுகிய கால பயிற்சி முறை கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தக் குறுகியகாலப் பயிற்சி ரத்து செய்யப்பட்டு பல நாட்கள் ஆகிவிட்டன. இப்போது தேவை இல்லை என்ற காரணத்தால் மறுபடியும் துவக்க வேண்டிய நிலையில் இல்லை. தேவை இருக்கும் போது அதுபற்றி பரிசிலிக்கலாம்.

திரு. ரெ. வீ. சவுந்திராஜன் : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் ஏறத்தாழ 8,000 பேருக்குமேல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வரையில் பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியை சில காலம் நிறுத்தி வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, என்னுடைய நிலைக்கு அவர்கள் நல்லாதரவு தந்ததற்கு நன்றி.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, பி.டி. படித்தவர்கள் இளநிலை ஆசிரியர்களாகப் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு பி. டி. ஆசிரியர்கள் ஊதியம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, செய்கிற வேலைக்குத் தகுந்தாற்போல் சம்பளம் தரப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இடையாது. ஆனால் படிப்புக்கு ஏற்ற சம்பளம் தரமுடியாது.

1978 மார்ச் 11]

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் மட்டுட் லேட்டாக வருவது இல்லை. வாத்தியார்களும் லேட்டாக வருகிறார்கள். ஆகவே, வாத்தியார்களுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கேட்கிற கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

திரு. மி. வின்செண்ட்: தலைவரவர்களே, எத்தனையோ பி. டி. ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். தற்போது 10 பிளஸ் 2 வந்து இருக்கிற காரணத்தால், பி. டி. படித்துவிட்டு இருக்கும் ஆசிரியர்கள் 9—10 வகுப்புக்கு மட்டும் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருப்பதால், இரண்டு ஆண்டுகளுக்குத்தான் அவர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலை இருக்கும். ஆகவே, 6-வது வகுப்பு முதல் 10-வது வகுப்பு வரை பாடம் சொல்லிக் கொடுக்க பி. டி. ஆசிரியர்களை நியமித்து, அவர்கள் செகண்டரி கிரேடு சம்பளம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், அந்த வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இப்போது புதிய ஆட்களை வேலைக்கு எடுக்கக்கூடிய நிலைமை அதிகமாக இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட் வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. ஆனால் இன்னும் சில நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இல்லாத நிலை இருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கும் இந்த நேரத்தில், அந்த ஆணையை சரிவர அமல் நடத்தி, நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது குறித்து தனிக்கேள்வி போடவும்.